

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 03.01.2026


# நிதியை நீதியுடன் நிலைநிறுத்திய முதல்வர்!

தமிழ்நாட்டின் நிதி நிர்வாகம் குறித்த தவறான பிம்பத்தைச் சிலர் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். நிதியை வெறும் எண்ணிக்கையாக அல்ல, எண்ணமாகப் பார்க்க வேண்டும். அத்தகைய நீதியை நிதி நிர்வாகத்தில் உருவாக்கினார் முதலமைச்சர் அவர்கள்.

**ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனேயே இரண்டு முக்கியமான தடைகள் தமக்கு உள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். முந்தைய பத்தாண்டு காலமாக தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் சீரழித்த அ.தி.மு.க. ஆட்சி என்பது ஒன்று. தமிழ்நாட்டின் வளர்ச்சியை அனைத்து வகையிலும் தடுக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றொன்று என்பதை மாண்புமிகு முதலமைச்சர் சுட்டிக் காட்டினார்கள்.**

இந்த இரண்டு தடைகளுக்கும் தீர்வு கண்டு, தமிழ்நாட்டை மீட்பது மட்டுமல்ல, வளர்க்கவும் வேண்டிய கடமையும் பொறுப்பும் முதலமைச்சருக்கு இருந்தது.

பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் சீரழிவுகளைச் சரி செய்து, ஒன்றிய பா.ஜ.க. அரசின் தடைகளையும் வென்று இன்று தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் வளர்த்தெடுத்துள்ளார்.

1. **தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது 2021 ஆம் ஆண்டில் 7.89 விழுக்காடாக இருந்தது. தற்போது தமிழ்நாடு 11.19 விழுக்காடாக உயர்ந்து விட்டது. 14 ஆண்டு களுக்குப்பின், மீண்டும் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு எட்டி இருக்கிறது.**
2. இந்திய நாட்டின் வளர்ச்சியில் நூறில் பத்து விழுக்காடு பங்கை தமிழ்நாடு செலுத்தி வருகிறது.
3. கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. தொழில் நிறுவனங்கள் முழுமையாக தனது பணியைத் தொடங்கும் போது 35 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.
4. இந்தியாவிலேயே அதிகத் தொழிற்சாலைகள் உள்ள மாநிலமாக, அதிகத் தொழிற்சாலைப் பணியாளர்கள் உள்ள மாநிலமாக, அதுவும் பெண் பணியாளர் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.
5. நிதிப் பற்றாக்குறை திறம்படக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருவாய் பற்றாக்குறை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
6. மாநில உள்நாட்டு உற்பத்தியில் கடனின் விகிதம் குறையும் போக்கில் உள்ளது. ஒன்றிய நிதிக்குழு பரிந்துரைத்த அளவான 28.7 விழுக்காட்டில் இது 2.63 விழுக்காடு குறைவே ஆகும். கடனுக்கு மிக முக்கியமான காரணம், ஒன்றிய அரசின் நடவடிக்கைகள்தான். மாநிலத்துக்குத் தர வேண்டிய நிதியையும் தருவது இல்லை. ஒன்றிய அரசின் திட்டங்களையும் மாநில அரசின் நிதியில் தான் செய்யவேண்டி உள்ளது. மேலும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் விட்டுச் சென்ற கடனுக்கு வட்டியாக மட்டும் ரூபாய் 1.40 லட்சம் கோடியை இன்றைய அரசு கொடுக்க வேண்டி உள்ளது.
7. நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் முன் 31.1.2025 அன்று 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் இந்தியாவின் தோல்பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியில் 38% பங்களிப்பும் இந்தியாவின் மொத்த தோல்பொருள்கள் ஏற்றுமதியில் 47% பங்களிப்பையும் தமிழ்நாடு வழங்கியுள்ளது என்றும், தோல் பொருட்கள் உற்பத்தித் துறையில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கி யுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முதலீட்டாளர்களின் தேவைக்கு ஏற்ப வழங்கப்படும் ஊக்கத் தொகை முறை, மூலதன மானியங்கள், ஊதிய மானியங்கள் மற்றும் நில விலைமானியங்கள் போன்றவற்றை தமிழ்நாடு அரசு சிறப்பாக வழங்கி வருகிறது என்றும் தெரிவித்துள்ளது.
8. மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள், ஜவுளி மற்றும் ஆடைகள், மின்னணுவியல் ஆகிய பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்குகிறது.
9. **நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான குறியீட்டில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. சமூக முன்னேற்றக் குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. குறைந்த வறுமை நிலைகளில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் வறுமை நிலை என்பது 11.28 விழுக்காடாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் வறுமை நிலை என்பது 1.43 ஆக குறைந்துவிட்டது. அதாவது குறைக்கப்பட்டு விட்டது.**
10. பணவீக்கம் குறைந்துவரும் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. 20 முக்கிய இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு 8ஆம் இடத்தில் - குறைந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கத்தைக் கொண்டுள்ள மாநிலமாக இருக்கிறது.
11. **அனைத்து நிதியும் வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவு செய்யப்படுகிறது. மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா பேருந்து பயணம் ஆகியவை பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளமாக இருக்கிறது. நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் ஆகிய திட்டங்கள் கல்வி முன்னேற்றத்தை உறுதி செய்துள்ளது. உடலினை உறுதி செய், காலை உணவு ஆகிய இரண்டும் பள்ளிக் குழந்தைகளின் நலத்தை அடிப்படையாகக் கொண்டவை. உள்கட்டமைப்பு வசதிக்காகச் செலவு செய்யப்பட்டவை அனைத்தும் வளர்ந்து வரும் மாநிலத்தின் தேவையை பூர்த்தி செய்கின்றன. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கோரப்படும் கடனானது மூலதனச் செலவுகளுக்குச் செய்ய வேண்டும். அதனைத் தான் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது. கொடுத்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளதை வைத்து நிதி நிர்வாகத்தை அளவிட வேண்டும்.**

இப்படி நிதியை நீதியுடன் வழங்கும் மாநிலம் எங்கும் இல்லை.



சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு நேற்று (02.01.2026) வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புத்தகம் வழங்கி வரவேற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.1.2026) திருச்சிராப்பள்ளியில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்கள் சந்தித்து, கும்பகோணத்தில் 28.1.2026 அன்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நடத்தும் மஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்பு மாநில மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், கவிஞர் மனுஷ்ய புத்திரன் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் ரூபி மனோகரன், அமிர்தராஜ், காங்கிரஸ் கட்சியின் அமைப்புச் செயலாளர் ராம் மோகன் ஆகியோர் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளி களுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் மற்றும் டிசம்பர் 3 இயக்கத்தின் தலைவர் தீபக் நாதன் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், மக்கள் விடுதலை கட்சி நிறுவனத் தலைவர் சு.க. முருகவேல்ராஜன் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## திருவரங்குளத்தில் மாபெரும் கபடிப் போட்டி! அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைக்கிறார்!

புதுக்கோட்டை, ஜன. 3-

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் நடத்தப்படும் மாபெரும் ஒரு ஊர் மின் ஒளி கபடி போட்டி ஜனவரி 3 ,4 சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி அளவில் ஸ்ரீ பிடாரியம்மன் கோவில் திடலில் நடை பெற உள்ளது.

விழாவிற்கு புதுக் கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார். பிற் படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் போட்டி களை துவக்கி வைக்கிறார். முன்னதாக அனைவரையும் திருவரங்குளம் தெற்குஒன்றிய திமுக செயலாளர் அரு. வடிவேல் வரவேற்க போட்டி ஏற்பாடுகளை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பால பிரபாகரன், பி.அஜய் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு களை செய்து வருகின்றனர். இளைஞர் அணி மணிகண்டன் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### ஜனவரி 3 முதல் 9ஆம் தேதி வரை மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக

## திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்!

### தொகுதி வாரியாக நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி வேண்டுகோள்!



மதுரை, ஜன. 3-

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு வருகிற 3ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை தொகுதி வாரியாக நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்கள் சார்பில் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் எனவும் அதற்கான அணிகளை பிரத்யேக இணைய தளத்தில் பதிவு செய்திட வேண்டுமென வடக்கு மாவட்டச் செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித் துள்ளார். அதன் விபரம்

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க திராவிட பொங்கல் சமூகநீதிக்கான திரு விழா கொண்டாட்டம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கொண்டாடப் படுகிறது.

அதனை முன்னிட்டு வருகிற 3ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை ஆண்களுக்கு கிரிக்கெட், வாலி பால், கபடி மற்றும் 200 மீட்டர் ஓட்டப்பந்தயப் போட்டிகளும் பெண்களுக்கு கோ கோ, கபடி மற்றும் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் என போட்டிகள் நடைபெற உள்ளது.

மேலும் மதுரை கிழக்கு தொகுதி சார்பாக உத்தங்குடியில் அமைந்துள்ள கலைஞர் திடலிலும், மதுரை மேற்கு தொகுதி சார்பாக டி.பி.கே சாலையில் அமைந்துள்ள மதுரை கல்லூரி வளாகத்திலும், மேலூர் சட்டமன்ற தொகுதி சார்பாக மேலூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும், சோழவந்தான் சட்டமன்ற தொகுதி சார்பாக அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் இப் போட்டிகள் நடைபெற உள்ளன.

இப்போட்டிகளில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் கழகங்கள் சார்பாக அணிகள் கலந்து கொள்ள வேண்டும் அவ்வாறு கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும் www.dravidapongal.in என்ற இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டும்

எனவே ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அணிகளை உரிய நேரத்தில் இணையத்தில் பதிவு செய்து தங்கள் பகுதி சார்பாக அணிகள் பங்கேற்பதை உறுதி செய்திட வேண்டும் அதன் மூலம் 2026 தலைவர் அறிவிப்பின்படி நமக்கான ஆண்டாக அமைத்திட வேண்டும் என வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தி.மு.க. வினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.